අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/09/96/07/1 ඔබේ යොමුව / உமது இல. / Your Ref. දිනය / திகதி / Date 2024.09.

*அனைத்து மாகாணக் கல்விச் செயலாளர்கள்,*
*அனைத்து மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,*
*அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,*
*அனைத்து பிரிவெனாதிபதிகள்,*
*அனைத்து பாடசாலை அதிபர்கள்,*

***தேசிய வாசிப்பு மாதம், பாடசாலை நூலக வாரம், பாடசாலை நூலக தினம் ஆகிய நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் - 2024***

*ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் மாதம் தேசிய வாசிப்பு மாதமாக பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. அதன் படி 2024 ஒக்டோபர் மாதம் அனுஷ்டிக்கப்படும் தேசிய வாசிப்பு மாதத்துடன் இணைந்ததாக பாடசாலை மாணவர்களுக்காக நடைமுறைப்படுத்தப்ப வேண்டிய நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பில் வழிகாட்டுவதற்காக இந்த ஆலோசனைகள் வெளியிடப்படுகின்றன.*

***01. தேசிய வாசிப்பு மாதத்தினுள் நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கு செய்தல்.***

*நூல்கள் உட்படலாக ஆக்கபூர்வமான வாசிப்பு சாதனங்களைத் தெரிவு செய்து வாசிப்பதனூடாக சமநிலையான ஆளுமையுடன் கூடிய, உணர்வு பூர்வமான அறிவைக் கொண்ட சிறுவர் சந்ததியினரை உருவாக்குவதற்காக ஒவ்வொருவரும் வாசிப்பினை தமது வாழ்நாள் பழக்கமாக்கிக் கொள்ளும் குறிக்கோளுடன் இந் நிகழ்ச்சித்திட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதுடன், அவற்றை பாடசாலைக்கு பொருத்தமான முறையில் தயாரித்து நடைமுறைப்படுத்துவது பாடசாலை அதிபரின் பொறுப்பாகும். இதற்காக நிதி சேகரித்தல் மற்றும் மாணவர்கள் அல்லது பெற்றோரிடமிருந்து அல்லது வேறு வழிகளில் நிதி உதவிகளைப் பெற்றுக் கொள்ளலாகாது என்பதுடன் பாடசாலையில் உள்ள அல்லது பாடசாலைக்கு கிடைக்கப்பெறும் வளங்களை தேவைக்கேற்ப பயன்படுத்தி கீழே தரப்பட்டுள்ள விதத்தில் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும்.*

*1.1 பாடசாலை மாணவர்களது வாசிப்புத் தேவைகளை அடையாளம் காணல் மற்றும் அதற்கு அவசியமான வசதிகளை வழங்குதல்.*

*1.2 நூலகத்தின் நூல்கள் உட்படலாக நூலகத்தின் வாசிப்பு சாதனங்களின் எண்ணிக்கையை அதிகரித்தல் மற்றும் நூலக வசதிகளை மேம்படுத்துவதற்கான பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கு செய்தல்.*
*(உ+ம்: புத்தக சந்தை ஒன்றை நடாத்துதல், வருடாந்தம் புத்தக நன்கொடை நாள் ஒன்றை நடைமுறைப்படுத்துதல்)*

*1.3 மாணவர்களது நூலகப் பாவணையினை மேம்படுத்துதல் மற்றும் வாசிப்பு இரசனையை அதிகரிப்பதற்கு நடவடிக்கையெடுத்தல்.*

*உ+ம்-*

- *வாசிப்பின் பெறுமதி தொடர்பில் அறியப்படுத்துவதற்காக விரிவுரைகள், கலந்துரையாடல்கள், விவாதங்கள், பேச்சுக்கள், விமர்சன ரீதியான நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்தல் மற்றும் நூல்களை வாசிப்பதற்கு ஊக்குவிக்கக்கூடிய வகையிலான சுவரொட்டிகள், துண்டுப் பிரசுரங்கள், வாக்கியங்கள் போன்றவற்றைக் காட்சிப்படுத்துதல்.*

- *வாசிப்பின் மூலம் வெற்றியீட்டிய நபர்களது சுயசரிதைகள் மற்றும் சுயசரிதை நூல்களைக் காட்சிப்படுத்துதல் மற்றும் அந் நபர்கள் தொடர்பில் மாணவர்களுக்கு அறிமுகத்தை வழங்குவதற்காக நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்*

- *வாசிப்புத் திறனுக்கான செயன்முறைகளை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் மற்றும் மாற்றீட்டு வாசிப்பு சாதனங்களை அறிமுகம் செய்வதனூடாக தகவலறிவை விருத்தி செய்தல்.*
  *(உ+ம்: திரைப்படங்களை வாசித்தல், தொலைக் காட்சி நாடகங்களை வாசித்தல், முத்திரைகளை வாசித்தல், போன்றவற்றினூடாக ஆக்கபூர்வமான மாற்றீட்டு வாசிப்பு சாதனங்களை அறிமுகம் செய்தல் மற்றும் நூல்களை அடிப்படையாக கொண்ட மொழி மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் போன்றன)*

- *பாடசாலையினுள் வாசிப்பு முகாம்கள், வாசிப்புக் கழகங்கள், நூலக சங்கம் போன்றனவற்றை ஒழுங்கு செய்தல்.*

- *2024 ம் ஆண்டில் பாடசாலையின் சிறந்த வாசிப்பவரை தெரிவு செய்து பாராட்டுதல்.*

***2. பாடசாலை நூலக தினம் மற்றும் பாடசாலை நூலக வாரத்திற்கான நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குசெய்தல்.***

*பாடசாலை நூலக வாரத்துடன் இணைந்ததாக நூலக பாவணையை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை பாடசாலைகளினுள் நடைமுறைப்படுத்துவதனூடாக அதனை மாணவர்களிடையே ஒரு பேசு பொருளாக்குவதையும், மாணவர்களை ஆர்வமூட்டுவதனூடாக மாணவர்களிடையே சுய கற்றல் திறன்களை விருத்தி செய்வதும் எதிர்பார்க்கப்படுகின்றது.*

*பாடசாலை நூலக வாரமானது ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் மாதத்தின் (வாசிப்பு மாதம்) இறுதி வாரத்தில் அனுஷ்டிக்கப்படுகின்றது என்பதுடன், அவ் வாரத்தின் திங்கட் கிழமை பாடசாலை நூலக தினமாக தேசிய மட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அதற்கமைய 2024ம் ஆண்டின் ஒக்டோபர் மாதம் 21ம் திகதி முதல் 25ம் திகதி வெள்ளிக் கிழமை வரையிலான 05 நாட்களில் பாடசாலை நூலக வாரத்திற்குரிய நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கு செய்வது அதிபரின் பொறுப்பாகும். இதன் போது நூலக வாரத்தை வகுப்பு மட்டத்தில் நடைமுறைப்படுத்துவதற்காக வகுப்புக்களுக்கான நூலகத் தலைவன்/ தலைவிகளை நியமிப்பது பொருத்தமாகும்.*

***2.1 2024.10.21 (முதல் நாள்)***

- *2024 ம் ஆண்டின் தொனிப்பொருளை ("வழிகாட்டும் தாரகைகளாம் நூல்கள் - வாசிப்பால் வென்றிடுவோம் நாங்கள்") உள்ளடக்கிய பதாகை ஒன்றை பாடசாலையின் முன்னால் காட்சிப்படுத்துதல்.*

- *பாடசாலையின் காலைக் கூட்டத்தில் "நூலகப் பயன்பாட்டின் முக்கியத்துவம்" தொடர்பில் உரை ஒன்றை நிகழ்த்துதல் மற்றும் நூலக தினம் மற்றும் வாரம் ஆரம்பிக்கின்றமை தொடர்பில் மாணவர்களை அறியப்படுத்துதல்.*

- *வழங்கப்பட்டுள்ள தொனிப் பொருளின் கீழ் சங்கீதம், நாடகம், சித்திரம், சுவரொட்டி மற்றும் ஏனைய ஆக்கங்களை உள்ளடங்கிய நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.*

***2.2 2024.10.22 ம் திகதி (இரண்டாம் நாள்)***

*நூலகத்தினுள்ளும் அதனை சூழவுள்ள பகுதிகளையும் சுத்தப்படுத்துதல் மற்றும் சூழல் அலங்காரங்களை செய்தல்.*

***2.3 2024.10.23 ம் திகதி (மூன்றாம் நாள்)***

*அதிபரது வழிகாட்டலின் கீழ் நூலகத்தில் உள்ள நூல்களை பாதுகாப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுத்தல்.*

***2.4 2024.10.24 ம் திகதி (நான்காம் நாள்)***

*நூலகத்தில் உள்ள புத்தகங்களை அதிகரிப்பதற்கான புதிய நிகழ்ச்சித்திட்டங்களை அறிமுகம் செய்தல்.*

***2.5 2024.11.25 ம் திகதி (ஐந்தாம் நாள்)***

*பாடசாலையின் சிறந்த விளைதிறனுடன் கூடிய வாசகர்களை கௌரவிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.*

*மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசனைகளுக்கமைய தங்களது பாடசாலையில் நடைமுறைப்படுத்திய நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பிலான அறிக்கை ஒன்றைத் தயாரித்து அதனை கோவைப்படுத்தி நூலகத்தில் பேணுதல் வேண்டும் என்பதுடன் உள்ளக மற்றும் வெளிவாரி மதிப்பீடுகளின் போதும் ஏனைய தேவையான சந்தர்ப்பங்களின் போதும் அவற்றை முன்னிலைப்படுத்த நடவடிக்கையெடுப்பது பொருத்தமாகும்.*

*(இவ் ஆலோசனைகள் www.moe.gov.lk எனும் கல்வி அமைச்சின் இணையத் தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.)*

*ஜே.எம் திலகா ஜயசுந்தர*
*செயலாளர்*